**நாள்:** ஜனவரி 11, 2014

# <u>மதத்தின் அடிப்படையில் ஏன் இந்த பாரபட்சம்?</u>

**- அருண் ஜெயட்லி**

*எதிர்க்கட்சி தலைவர் (மாநிலங்களவை)*

அரசியல் சட்டத்தை உருவாக்கிய தலைவர்களெல்லாரும், அரசியல் சட்டத்தில் பகுதி நான்கில் உள்ள மாநிலக் கொள்கையில் தெளிவான நெறிமுறை கோட்பாடுகளை வகுத்து அதன் படி செயல்பட்டனர். அரசியல் சட்டம், விதி 44இல் “ஒவ்வொரு மாநில அரசும் அதன் குடிமக்கள் இந்தியாவின் பகுதிகள் முழுவதும் வேறுபாடற்ற ஒரே குடியுரிமை அடையாளத்தைக் கொண்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும்”. அந்த ஒரே மாதிரியான குடியுரிமை அடையாளம் குடிமக்களின் உரிமைகளோடு தொடர்புடையதாக இருக்க வேண்டுமே தவிர, மதங்களின் நம்பிக்கைகள் சடங்குகள் தொடர்புடையதாக இருக்க கூடாது. ஆயினும், சிலர் இந்த பொது குடியிரிமை அடையாளங்களை தங்களுடைய மத உரிமைகளோடு தவறாகத் தொடர்புபடுத்திக் கொள்கிறார்கள். நம்முடைய சட்ட அமைப்பில், ஒவ்வொரு குடிமகனுக்குமான உரிமைகளைத் தனிப்பட்ட முறையில் வகுத்திருந்தாலும் கூட, குற்றவியல் தொடர்பான சட்டங்களில் அந்த உரிமைகளைக் கொண்டு எந்த விதிவிலக்கும் அளிக்கப்படவில்லை. குற்றவாளியில் பிறப்பால் எந்த அடையாளம் கொண்டிருந்தாலும் குற்றம் குற்றமே. அவருடைய மத நம்பிக்கைகளை வைத்து அவர் குற்றமுள்ளவரா குற்றமற்றவரா என்று கண்டுபிடிக்க முடியாது.

மத்திய உள்துறை அமைச்சர், திரு சுஷில் குமார் ஷிண்டே, அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் சிறுபான்மை பிரிவினருக்கு எதிராக நடந்துள்ள தீவிரவாத வழக்குகளையெல்லாம் மறுஆய்வு செய்ய வேண்டுமென்று கடிதம் எழுதப் போவதாக தெரிவித்துள்ளார். வழக்கம்போல, அவர் மனதளவில் குறிப்பிடுவது மத ரீதியான சிறுபான்மையினரையே தவிர, மொழிவாரி சிறுபான்மையினரை அல்ல. அவர் மாநில அரசுகளை, மறு ஆய்வு குழுக்களை அமைத்து, தீவிரவாத செயல்களால் பாதிக்கப்பட்ட மக்கள் என்ற அடிப்படையிலல்லாமல், குடிமக்கள் பிரிவுகள் அடிப்படையிலான வழக்குகளை மட்டும் ஆய்வு செய்யக் கேட்டுக்கொண்டுள்ளார். இந்த நடவடிக்கை உள்துறை அமைச்சரின் தலைமை மற்றும் சட்டபூர்வ செயல்பாடுகள் தொடர்பான அடிப்படை கேள்விகளை எழுப்புகிறது.

இந்த நடவடிக்கை அரசியல் நோக்கம் கொண்டது என்பது தெள்ளதெளிவானது. இந்தியாவில் பலதரப்பட்ட மக்கள் தீவிரவாத செயலுக்காகக் குற்றம்சாட்டப்பட்டிருக்கிறார்கள். குறிப்பிட்ட முஸ்லீம் தீவிரவாத குழுக்களோடு தொடர்புள்ளவர்களுக்கு எதிராக மட்டுமே இந்த விதிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. கடந்த சில வருடங்களில் பெரும்பான்மை பிரிவுகளிலுள்ள சிலர் மீதும் இது போன்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. நாட்டின் பல பகுதிகளில் நடந்த தீவிரவாதத்

தாக்குதலுக்காக மாவோயிஸ்டுகள் மீது குற்றப்பதிவு செய்யப்பட்டுள்ளது. தீவிரவாதத் தடுப்பு சட்டத்தின் விதிகள் சில தெற்கிந்திய மற்றும் ஜம்மு காஷ்மீர் பகுதிகளிலுள்ள சிலர் மீதும் செயல்படுத்தப்பட்டுள்ளது. 2004 ஆண்டுக்கு முந்தைய பொடா சட்டத்தின் கீழ் நிலுவையில் உள்ள வழக்குகள் பல உள்ளன. அதைத் தொடர்ந்து நடந்த வழக்குகள் சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின் கீழ் நிறைய இருக்கின்றன. ஆனால் தேர்தலையொட்டி குறிப்பிட்ட சில பிரிவினருக்கு எதிரான வழக்குகளை மட்டும் மறு ஆய்வு செய்யும் இந்த நடவடிக்கை, முற்றிலும் குற்றவியல் பொது விதிகளுக்கு எதிரானதும் வாக்கு வங்கிகளைப் பெறும் நோக்கத்திலும் மட்டுமே எடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த நடவடிக்கை சட்டத்திற்கு புறம்பானது என்பது தெளிவான ஒன்று. விதி 14 எல்லா குடிமகனும் சமம் என்பதை உறுதி செய்கிறது. இங்கு அறிவு பூர்வமாகவும் தனித்துவமான அடையாளங்கள் அடிப்படையிலும் மட்டுமே இங்கே அர்த்தமுள்ள பிரிவினைகள் அமைந்துள்ளன. ஆனால் குற்றவியல் வழக்குகளை பிறப்பு மற்றும் மத நம்பிக்கை அடிப்படையிலான பிரிவினை அடையாளங்களைக் கொண்டு ஆய்வு செய்வது அரசியல் சட்டத்திற்கு புறம்பானது. ஒரு குறிப்பிட்ட நம்பிக்கை அடிப்படையில் செய்யப்படும் குற்றங்கள் என்பதற்காக அவற்றை மட்டுமே குற்றங்கள் என்று பதிவு செய்ய முடியாது. மாநிலங்கள் அனைத்தும் மத்திய உள்துறை அமைச்சரால் குறிப்பிட்ட நம்பிக்கை அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான வழக்குகளை மட்டும் மறு ஆய்வு செய்யக் கட்டாயப்படுத்தப்பட்டு வருகிறது. நாத்திகர்கள், யதார்த்தவாதிகள் மற்றும் இந்து மத நம்பிக்கையாளர்கள் இதில் முற்றிலும் தவிர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதில் பல முரண்பாடுகளும் உண்டு. இந்து மத நம்பிக்கையாளர்கள் ஜம்மு காஷ்மீர் மற்றும் தெற்கிந்திய மாநிலங்களில் சிறுபான்மையினராக இருக்கிறார்கள். அந்த மாநிலங்களில் வழக்குகள் மறு ஆய்வு செய்யப்பட அவர்கள் தகுதியானவர்களா அல்லது அந்த மாநிலங்களில் பெரும்பான்மையாக இருக்கும் தேசிய அளவில் சிறுபான்மையினர் என்று வகைப்படுத்தப்பட்டுள்ள மக்கள் தகுதியானவர்களா? சிலர் மத அடிப்படையிலான குற்றவாளிகளும் மற்றவர்கள் எல்லாம் வேறு பிரிவினரை சேர்ந்தவர்களாக இருக்கும் மாவோயிஸ்டுகள் போன்ற குழுக்களுக்கு எதிரான வழக்குகளுக்கு என்ன நடக்கும்? மத்திய உள்துறை அமைச்சரின் இந்த செயல்பாடு சமத்துவத்தைக் கூறும் அரசியலமைப்புச் சட்டத்தை மீறுவதால் இதில் எந்த நியாயமான காரணமும் அறிவு பூர்வமும் இல்லை என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

வழக்குகளைத் திரும்பப் பெறுவதற்கான அதிகாரம் குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 321 இன் கீழ் உட்பட்டது. அது நீதிமன்றத்தில் வழக்கைத் திரும்ப பெறுவதற்கான ஒரு சரியான காரணத்தோடு அணுகும் அரசு வழக்கறிஞருக்கு மட்டுமே அதிகாரமுண்டு. நீதிபதியும் தன் மனதளவில் அந்த வழக்கை தள்ளுபடி செய்வதற்கான ஆய்வை

செய்ய வேண்டியிருக்கிறது. குற்றவியல் சட்டம் எந்த மறு ஆய்வு குழுவிற்கும் நிலுவையில் உள்ள குற்றப்பதிவு செய்யப்பட்ட வழக்குகளை தள்ளுபடி செய்ய எவ்வித அதிகாரமும் வழங்கவில்லை. எப்பொழுதெல்லாம் சட்டமியற்றுபவர்கள் அவசியமென்று நினைக்கிறார்களோ, அப்போது குறிப்பிட்ட மறுஆய்வு குழுக்களை அவர்கள் அணுகலாம். அரசு வழக்கறிஞர் மற்றும் நீதிபதியின் தீர்மானத்தின்படி செயல்படும் ஒரு கூடுதல் மறுஆய்வு குழு சட்டம் தெரியாதது. இதுவும் தெளிவான குற்றவியல் சட்டத்தின் விதிகளை மீறுவதாகும்.

மாநில அரசுகளுக்கு மத்திய உள்துறை அமைச்சர் குற்றங்களையும் குற்றவாளிகளையும் அணுகுவதில் வழங்கிய உத்தரவுகள்/ஆலோசனைகள் முறையற்ற கொள்கையாக, மத ரீதியான முரண்பாடுகளையும் பாரபட்சங்களையும் கொண்டவையாக உள்ளன. இது அரசியலமைப்பு உறுதி செய்யும் சமத்துவத்தை மீறுகிறது. குற்றவியல் சட்டத்தின் அடிப்படை கொள்கைகளையும் விதிகளையும் கூட இது மீறுகிறது. மத்திய உள்துறை அமைச்சரின் அரசியலமைப்பிற்கு முரணான இத்தகைய உத்தரவுகளுக்கு மாநில அரசுகள் கட்டுப்பட்டவை அல்ல.

.✵✵✵✵✵